**மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்.**

முன்னிலை : திருமதி ஜி.எம்.வசந்தி, எம்.எல்.,

(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)

மாவட்ட நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு)

**2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15 ஆம் நாள் - திங்கள்கிழமை**

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆனி திங்கள் 01ம் நாள்

CNR NO.TNNG010005562026

**Tr.O. P. No. 20/2026**

1. முத்துமாரியம்மாள்
2. வள்ளி (எ) வள்ளியம்மாள் .... மனுதாரர்கள்

//எதிர்//

1. சந்தானகிருஷ்ணன்
2. ஜெயராஜ் .... எதிர்மனுதாரர்கள்

இம்மனு என்முன்பாக இன்று (15.06.2026) விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்தரப்பில் வழக்குரைஞர் திரு. வேதை. இராமச்சந்திரன் அவர்களும், எதிர்மனுதாரர்கள்தரப்பில் வழக்குரைஞர் திரு. டி. வைரவநாதன் அவர்களும் ஆஜராகியும் இருக்க, எதிர்மனுதாரர்கள்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணையின் அடிப்படையில் இன்று இந்நீதிமன்றம் ஆவணங்களை பரிசீலனை செய்து வழங்கும்....

**உத்தரவு**

இம்மனு நாகப்பட்டினம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண் 105/2023ஐ நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண் 48/2024 உடன்

இணைத்து விசாரணை செய்திட ஏதுவாக நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்து உத்தரவிடக்கோரி பிரிவு 24 சிபிசி- ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2.மனு சுருக்கம்:</u>**

1ம் மனுதாரரின் தாயார் 2ம் மனுதாரர் ஆவார். இம்மனு சொத்தினை 1ம் மனுதாரரின் தந்தையும் 2ம் மனுதாரரின் கணவருமான வெள்ளையன் 1977ம் ஆண்டு திருஞானசம்பந்தம்பிள்ளை அவர்களிடமிருந்து ரூ.5000/- கிரயத்தொகையாக கொடுத்து சொத்தின் அனுபவத்தினை பெற்று ஒரு பகுதியில் கூரை வீடு கட்டிக்கொண்டும், மற்ற இடங்களில் புஞ்சை பயிர்களான வாழை மற்றும் காய்கறிகளை பயிரிட்டு அனுபவித்து வந்தார். மேற்படி திருஞானசம்பந்தம் காலமாகிவிட்டதால் அவருடைய ஒரே வாரிசான கமலாம்பாளிடம் பத்திர பதிவு செய்துகொடுக்க கேட்டார். அப்போது அவர் மேற்கொண்டு கேட்ட ரூ.10,000/-த்தை 1ம் மனுதாரரின் தந்தை வெள்ளையன் கொடுத்த பின்னிட்டு, மனு சொத்தினை 2ம் மனுதாரர் பெயருக்கு கமலாம்பாள் கடந்த 14.08.1990 அன்று ஒரு கிரயப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். அதன்படி 550 சதுரடியில் ஆர்சிசி வீடு கட்டியும், எஞ்சிய பகுதியினை கொல்லையாகவும் மனுதாரர்கள் அனுபவித்து வருகிறார்கள். மனு சொத்திற்கு வீட்டுவரி, குடிநீர் இணைப்பு மற்றும் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

2. இந்நிலையில் 08.03.2023 அன்று 1ம் எதிர்மனுதாரர் நாகப்பட்டினம் இணை சார்பதிவாளரிடம் 2ம் மனுதாரர் 1ம் மனுதாரர் பெயருக்கு

எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் குறித்து ஆட்சேபனை தெரிவித்து மனு கொடுத்தார். அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டதன் பின்னிட்டு எதிர்மனுதாரர்கள் மனுதாரர்கள் அனுபவத்திற்கு இடையூறு கொடுத்ததனால் மனுதாரர்கள் நாகப்பட்டினம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்கோரி அ.வ.எண் 105/2023 தாக்கல் செய்தனர். அவ்வழக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. எதிர்மனுதாரர்கள்தரப்பில் இம்மனுதாரர்களை 7, 8 பிரதிவாதிகளாக சேர்த்து விளம்புகை, சுவாதீனம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண் 48/2024 வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது.

3. மனுதாரர்கள்தரப்பில் நாகப்பட்டினம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அ.வ.எண் 105/2023ல் அனைத்து ஆவணங்களும் தாக்கல் செய்யப்பட்டுவிட்டதால், நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அ.வ.எண் 48/2024ல் தாக்கல் செய்ய இயலவில்லை. இருவழக்குகளிலும் வழக்கு சொத்து ஒன்றே ஆகும். மனுதாரர்களுக்கு வழக்கு சொத்தானது நீண்டகால அனுபவத்தின் அடிப்படையில் உரிமை சித்தித்துள்ள நிலையில் அதுகுறித்து இருவழக்கினையும் ஒன்றாக சேர்த்து ஒரே நீதிமன்றத்தில் விசாரணை செய்து முடிவு செய்யவேண்டியுள்ளது. எனவே மனுவை அனுமதித்து

உத்தரவிடவேண்டும். இல்லாவிடில் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும்.

4. எதிர்மனுதாரர்கள்தரப்பில் இம்மனுவை அனுமதிப்பதில் ஆட்சேபனை எதுவும் இல்லை என தெரிவித்து குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது.

5. மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதா? என்பதே தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனையாகும்.

6. **தீர்வு**

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்ததில், 14.08.1990 அன்று 2ம் மனுதாரர் பெயரில் ஏற்பட்ட கிரயப்பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்து மனுதாரர்களது அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளதாகவும், அதற்கு எதிர்மனுதாரர்கள் இடைஞ்சல் ஏற்படுத்துவதாகவும் குறிப்பிட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண் 105/2023ஐ எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நாகப்பட்டினம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்பதும், தாவா சொத்தில் இம்மனுதாரர்களான 7, 8 பிரதிவாதிகள் வாடகைதாரர்களாக இருந்துவருகின்றனர் என்றும், தாவா சொத்தில் 7, 8 பிரதிவாதிகளுக்கு யாதொரு உரிமையும் கிடையாது என்றும், 7ம் பிரதிவாதி 8ம் பிரதிவாதி பெயரில் பதிவு செய்துகொடுத்துள்ள செட்டில்மெண்ட் பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றும் தெரிவித்து, விளம்புகை, சுவாதீனம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அ.வ.எண் 48/2024ஐ இந்த எதிர்மனுதாரர்கள் தாக்கல்

செய்துள்ளனர் என்பதும் தெரியவருகிறது. மேற்படி இரு வழக்குகளும் விசாரணைக்காக நிலுவையில் உள்ளது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும். எதிர்மனுதாரர்கள்தரப்பில் இம்மனுவை அனுமதிப்பதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்து குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு, அது பதிவு செய்யப்பட்டது.

7. இரு வழக்குகளிலும் இம்மனுவின் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பினர்கள் ஆவர். வழக்கிடை சொத்துக்களும் ஒன்றறே ஆகும். வழக்கின் தன்மையும், தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கும் நிலையில் அவைகள் வெவ்வேறு நீதிமன்றங்களில் நடத்தப்படும் நிலையில் முரண்பட்ட தீர்ப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. எனவே இத்தகைய சூழ்நிலைகளைத் தவிர்க்கவும், சட்டத்தின் சீரான தன்மையைப் பாதுகாக்கவும், ஒரே தன்மையுடைய வழக்குகளை வெவ்வேறு இடங்களில் விசாரிப்பதால் ஏற்படும் காலவிரயம் மற்றும் பணிச்சுமையைத் தவிர்க்கும்பொருட்டும் மேற்படி வழக்குகளை ஒருங்கிணைத்து ஒரே நீதிமன்றத்தில் விசாரிக்க ஏதுவாக இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடுவதே சரியானது என்று இந்நீதிமன்றம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவில்,** இந்த மனு அனுமதிக்கப்பட்டு, நாகப்பட்டினம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்

105/2023ஐ நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண் 48/2024 உடன் இணைத்து விசாரணை செய்திட ஏதுவாக நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து உத்தரவிடப்படுகிறது. நாகப்பட்டினம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மேற்படி வழக்கு கோப்புகள் அனைத்தையும் இந்த உத்தரவு நகல் கிடைத்த 3 தினங்களுக்குள் நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்க உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தாளருக்கு மொழியப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15 ம் நாளில் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

G M VASANTHI

Digitally signed by G M VASANTHI
Date: 2026.07.01 11:37:14 +0530

மாவட்ட நீதிபதி

நாகப்பட்டினம்.(மு.கூ.பொ)